எம்.சி.ஓபி.எண் : 4076/2019 தேதி: 21.01.2026

மசா :2

பெயர் : குருநாதன் இராமலிங்கம்

த/பெயர் : இராமலிங்கம்

வயது : 41

**<u>மனுதாரர் தரப்பில் சாட்சி 2ன் முதல் விசாரணை</u>**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சிட்டியூனியன் வங்கியில் உதவி மேனேஜராக பணியில் உள்ளேன். எனக்கு நீதிமன்த்தில் இருந்து அழைப்பானை வந்தது. எனது அடையாக அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்டது, எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் மசாஆ20, எனது நிறுவனத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரக்கடித்தில் கணினிப்பதிவிறக்க நகல் மசாஆ21. பிரியா என்பவரின் நியமனக்கடித்தின் ஆன்லைன் பதிவிறக்க நகல் மசாஆ 22. மேற்படி பிரியா என்பவருக்கு ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2025 வரையிலான பேஸ்லிப் விவரங்கள் மசாஆ23 வரை ஆகும். மேற்படி பிரியா என்பவர் எங்கள் வங்கியின் கூடுவாஞ்சேரி பிரேச்சில் கிளைமேலாளராக பணிபுரிந்து வருகிறார். தற்போலுது அவர் CDPC department இல் துணைமேலாளராக பணியில் உள்ளார். ஏற்கனவே பெற்று வந்த மேலாளருக்கான அலவன்ஸ்கள் இந்த பதவியில் அவருக்கு கிடைக்காது. அவருடன் பணி செய்த நபர்கள் தற்பொழுது ரூ.300000 க்கு மேல் சம்பளம் பெறுகிறார்கள்.

**<u>2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுவிசாரணை</u>**

மேற்படி பிரியா என்பவர் 2006 ஆம் வருடம் எங்கள் வங்கியில் பணியில் சேர்ந்தார். அப்போது எந்த கேடரில் பணியில் சேர்ந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மசாஆ 22 ன் படி அவர் கிலேரிக்கல் டிரேய்னியாக சேர்ந்து மாத சம்பளமாக ரூபாய் 6000 பெற்று வந்தார் என்றால் அப்பொழுது அவர் டிரேய்னி ஆனதால் சம்பளம் குறைவாக இருந்தததது. மேற்படி பிரியா என்பவருக்கு எந்ததேயில் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அவருக்கு 20.04.2019 இல் விபத்து

ஏற்பட்ட பிறகும் அவர் வேலைக்கு தொடர்ந்து வந்துகொண்டுதான் இருக்கிறார் என்றால் சரிதான். 2006 முதல் இன்று வரையில் அவர் தொடர்ச்சியாக எங்களது வங்கியில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். அவர் எந்த சூழ்நிலையிலும் இயலாமையை குறிப்பிட்டு நான் வேலையை விட்டு நின்று விடுகிறேன் என்று எங்களது வங்கிக்கு எந்த கடிதமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் 2019 இல் ஏப்ரல் மாதம் அவரது சம்பளமானது ரூபாய் 73714 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு டிசம்பர் மாதம் 2025 இல் அவருடைய சம்பளம் ரூ.142543 ஆகும் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாணையில் மேற்படி பிரியா என்பவருக்கு ஒரு மேனேஜருக்கு கிடைக்ககூடிய அலவன்ஸ்கள் கிடைக்காது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் அளித்த சாட்சியமானது தவறானது என்றாலும் மனுதாரருக்கு ஆதரவாக மேற்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. டிசம்பர் 2025 இல் உள்ள பேசிப்பில் உள்ள பல தலைப்புகளில் வெவ்வேறு வகையான அலவன்ஸ்கள் கொடுக்கபட்டுள்ளது என்றால் சரிதான். சில அலவன்ஸ்கள் விட்டுப்போய்யுள்ளது. சட்டப்படி மனுதாரருக்கு இந்த பணியில் என்னென்ன அலவன்ஸ்கள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டதால் சம்பள இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மசாஆ 23 இன் படி பிரியா என்பவருக்கு மாத சம்பளத்தில் எல்லா மாதமும் சரியான சம்பளம் தான் பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் மனுதாரருக்கு வேலை இழப்போ வருமான இழப்போ எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அவருக்கு பதவி உயர்வு கொடுக்கும் அதிகாரி இல்லை என்றால் சரிதான். நான் 2007 டிசம்பரில் தான் பணியில் சேர்ந்தேன். அப்போழுது நான் டிரேனிங் கிளர்க்காக தான் பணியில் சேர்ந்தேன். நான் தற்பொழுது துணைமேலாளராக பணியில் உள்ளேன். மனுதாரரும் தற்போழுது துணைமேலாளர் தகுதியில் தான் உள்ளார் என்றால் சரிதான். அதனால் மனுதாரருக்கு பதவி உயர்வு ஏதும் பாதிக்கபடவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் மனுதாரருக்கும் ஒரே

பணி தகுதிதான் என்றால் சரிதான். அதனால் நான் சில இடங்களில் மனுதாரருக்கு சாதகமாக மிகைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது</u>

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.